## இளைஞர்களைக் கொள்கைமயப்படுத்தும் பொறுப்பு மற்றவர்களைவிட நமக்கு அதிகம்:

# பாசிஸ்ட்டுகளை தமிழ் மண்ணில் காலூன்றாமல் செய்வதே அய்யா ஆனைமுத்துக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலி!

### சென்னையில் நூற்றாண்டு மலரை வெளியிட்டு

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

சென்னை,அக்.12-

**சென்னையில், மார்க்சிய - பெரியாரிய பொதுவுடைமை இயக்கம் சார்பில், நடைபெற்ற பெரியாரியல் அறிஞர் அய்யா வே.ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு விழா மலரை வெளியிட்டார்.**

**அப்போது அவர், ``பாசிஸ்ட்டுகளை தமிழ் மண்ணில் இன்றைக்கு மட்டுமின்றி, என்றைக்கும் காலூன்ற விடாமல் செய்வதே அய்யா ஆனைமுத்து அவர்களுக்கு, நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி. தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பரப்பவே தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த அய்யா ஆனைமுத்துவின் புகழ் ஓங்கட்டும்” என்று அவருக்குப் புகழ்மாலை சூட்டினார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

இன்றைக்கு அறிஞர் அய்யா ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் மலர் வெளியீட்டு விழாவில் பங்கேற்று உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கின்ற வாய்ப்பை எனக்கு அளித்த அண்ணன் ஆ.ராசா அவர்களுக்கும், அமைச்சர் அண்ணன் சிவசங்கர் அவர்களுக்கும், அண்ணன் வாலாசா வல்லவன் அவர்களுக்கும் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிகழ்ச்சியில் நானும் பெரியாரின் தொண்டனாக, மாணவனாக கலந்துகொள்வதில் மிகுந்த பெருமை அடைகிறேன்.

### தாய் வீட்டிற்கு வருகை

அண்ணன் வாலாசா வல்லவன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டுப் பேசினார். துணை முதலமைச்சர் அவர்களுக்கு பல்வேறு நிகழ்ச்சிகள் இருக்கின்றன. இருந்தாலும் எங்களுக்கு நேரம் ஒதுக்கி, இந்த நிகழ்ச்சிக்கு வந்ததற்கு நன்றி என்று குறிப்பிட்டு என்னை அந்நியப்படுத்தி பேசிவிட்டார். எத்தனையோ நிகழ்ச்சிகள் இருந்தாலும் அவற்றையெல்லாம் விட, மிகமிக முக்கியமான நிகழ்ச்சியாக நான் கருதுவது, இன்றைக்கு இந்த அரங்கில் நடந்துகொண்டு இருக்கின்ற அறிஞர் ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு விழா. இன்னும் சொல்லப்போனால், எனது தாய் வீட்டிற்கு நான் வருகை தந்துள்ளேன்.

இங்கு மேடையில் இருக்கின்ற அறிஞர்கள், பேச்சாளர்கள் உரையைக் கேட்டு ரசித்து வியந்துள்ளேன். இந்த நிகழ்ச்சியிலும் கடைசிவரை இருந்து உங்கள் அனைவரின் பேச்சையும், கருத்துகளையும் கேட்க மிக ஆவலுடன் இருக்கிறேன். இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள வாலாசா வல்லவன் உள்ளிட்ட அனைவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நூற்றாண்டு விழா

சுயமரியாதை இயக்கத்தை தந்தை பெரியார் அவர்கள் 1925-ஆம் ஆண்டு தொடங்கினார். அதே 1925-ஆம் ஆண்டுதான் அய்யா ஆனைமுத்து அவர்களும் பிறந்தார். இப்போது 2025-ஆம் ஆண்டில் சுயமரியாதை இயக்கத்திற்கு நாம் நூற்றாண்டைக் கொண்டாடிக்கொண்டு இருக்கிறோம். அய்யா ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு விழாவையும், சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழாவுடன் சேர்த்து, நாம் கொண்டாடிக்கொண்டு இருக்கிறோம்.

அய்யா ஆனைமுத்து அவர்களுக்கு நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும், டாக்டர் கலைஞர் மீதும் எப்போதுமே ஒரு பாசமும், அன்பும் உண்டு. தந்தை பெரியார் அவர்களின் கருத்துகளை ஒவ்வொரு தொகுப்பாக தொகுத்து, ‘பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்’ என்ற நூலாக அய்யா ஆனைமுத்து அவர்கள் கொடுத்துள்ளார்.

### கலைஞர்தான் வெளியிட்டார்

1974-ல் அன்றைய முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள், அய்யா ஆனைமுத்து அவர்கள் தொகுத்த பெரியார் ஈ.வெ.ரா சிந்தனைகள் முதல் பதிப்பை வெளியிட்டு சிறப்பித்தார். அந்தத் தொகுப்புகளின் மறுபதிப்பையும் 2010-ஆம் ஆண்டு அண்ணா அறிவாலயத்தில் நம் கலைஞர் அவர்கள்தான் வெளியிட்டார்கள். அந்த விழாவில், நம் கழகத் தலைவர், தற்போதைய முதலமைச்சர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்.

எனவே நான் வெறும் கலைஞரின் பேரனாக மட்டுமல்ல, பெரியாரின் பேரனாக, பேரறிஞர் அண்ணாவின் பேரனாக, பெரியவர் ஆனைமுத்து அவர்களின் பேரனாக, கொள்கைப் பேரனாக இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டதற்கு மிகுந்த பெருமை அடைகிறேன். பெரியாரின் தொண்டர்களுக்கு ஒரு சிறப்பு உண்டு. பெரியாரின் தொண்டர்களை, துறவிகளைவிட மேலானவர்கள் என்று பெருமையாக சொல்வார்கள். அதற்கு மிகச் சிறந்த உதாரணம்தான் அய்யா ஆனைமுத்து அவர்கள். 1956-இல் தான் செய்துகொண்டு இருந்த பணியை விட்டுவிட்டு, பெரியாரின் கொள்கைப் பணிக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர் அய்யா ஆனைமுத்து அவர்கள்.

‘சிந்தனையாளர்’ இதழைத் தொடங்கி தனது இறுதிகாலம் வரை அதை நடத்தி வந்தார். இப்போது அந்த இதழை புதிய சிந்தனையாளன் என்ற பெயரில் நம் வாலாசா வல்லவன் அவர்கள் நடத்திக்கொண்டு இருக்கிறார்.

கலைஞர் அவர்கள், அய்யா ஆனைமுத்து அவர்களிடம் ஒரு கோரிக்கை வைத்தா. தந்தை பெரியாரின் சிந்தனைகளைப்போல, அண்ணாவின் சிந்தனைகளையும் நீங்கள் தொகுத்து புத்தகமாக வழங்க வேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்தார். அய்யா ஆனைமுத்து காலத்தில் அது நடக்கவில்லை என்றாலும், இங்கு வந்துள்ள அண்ணன் செந்தலை கௌதமன் அவர்கள் அண்ணா அறிவுக்கொடை என்று அண்ணாவின் எழுத்துகள், பேச்சுகள் அனைத்தையும் தொகுப்பாக கொண்டுவந்துள்ளார்.





துணை முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.10.2025) சென்னை இராஜா அண்ணாமலைபுரம், முத்தமிழ்ப் பேரவை டி.என்.இராசரத்தினம் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், பெரியாரியல் அறிஞர் தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மலரினை வெளியிட வே.ஆனைமுத்து அவர்களின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் பெற்றுக் கொண்டனர். கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி. அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், ஒன்றிய மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக்குழு உறுப்பினர் பேராசிரியர் மு.நாகநாதன், விடுதலை ராஜேந்திரன், புலவர் ந.செந்தலை கவுதமன், கு.இராமகிருட்டிணன், சுப.வீரபாண்டியன், வாலாசா வல்லவன், உள்பட தி.மு.கழகத்தினர், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மண்டல் கமிஷன் அறிக்கை

அய்யா ஆனைமுத்து அவர்கள் எழுத்து பணியோடு மட்டும் நிற்கவில்லை. அவர் களப்பணியிலும் ஈடுபட்டார். தமிழ்நாட்டில் மட்டுமல்ல பீகார், டெல்லி போன்ற வடமாநிலங்களுக்கு சென்று சமூகநீதிக்காக குரல் கொடுத்திருந்தார். வடமாநிலங்களில் பல தலைவர்களை சந்தித்து மண்டல் கமிஷன் அறிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று குரல் கொடுத்தார் அய்யா ஆனைமுத்து அவர்கள்.

இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களிலும், வேலைவாய்ப்புகளிலும் இடஒதுக்கீடு கிடைத்து இருக்கிறது என்றால் அதற்கான அய்யா ஆனைமுத்து அவர்களின் உழைப்பை யாராலும் மறுக்கவும், மறக்கவும் முடியாது. அய்யா ஆனைமுத்து போன்ற பெரியாரின் தொண்டர்கள் இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் நிரம்பி இருக்கிறார்கள். எந்தவொரு பலனையும் எதிர்பார்க்காமல் சமூக மக்களுக்காக தங்களை அர்பணித்துக்கொண்டு உழைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு இந்த மேடையே மிகச்சிறந்த உதாரணம்.

அண்ணன் சுப.வீரபாண்டியன், அக்கா அருள்மொழி, அண்ணன் கோவை ராமகிருஷ்ணன், அண்ணன் கொளத்தூர் மணி என அத்தனைப்பேரும் தங்களை வாழ்க்கையே, பெரியாரின் கொள்கைக்காக அர்பணித்துக்கொண்டு, வாழ்கிறார்கள்.

பெரியார் தொண்டர்களின் தன்னலம் இல்லாத உழைப்புதான், தமிழ்நாட்டை சுயமரியாதை மண்ணாக மாற்றி வைத்துள்ளது. இங்கு பக்கத்தில் இருக்கிற ஒருவர் கிண்டியில் இருப்பவர். தமிழ்நாட்டின் ஆளுநர், அவர் நம் நண்பர்தான். அவர் தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்துவிட்டார். பாசிச பா.ஜ.க-வுக்கு தேர்தல் பிரச்சாரம் செய்வதாக நினைத்துக்கொண்டு நமக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்துகொண்டு இருக்கிறார். ஒரு மூன்று நாட்களுக்கு முன்பு ஒரு நிகழ்ச்சிக்கு சென்று பேசியுள்ளார்.

தமிழ்நாட்டில் எங்கு சென்று பார்த்தாலும், எல்லா இடத்திலும் தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்று எழுதி வைத்துள்ளார்கள். தமிழ்நாடு யாருடன் போராடும், தமிழ்நாடு யாருடன் வெல்லும் என்று கேள்வி கேட்டிருந்தார்.

### தமிழ்நாடு போராடும்

நான் ஏற்கனவே அவருக்கு பதில் சொல்லி இருக்கிறேன். ஆளுநர் ரவி அவர்களே உங்களுடன் தான் தமிழ்நாடு போராடும், உங்களை வென்று காட்டுவோம். பெரியார் தொண்டர்கள் நிறைந்து இருக்கிற இந்த அரங்கத்தில் இன்னும் நான் அழுத்தம், திருத்தமாக சொல்ல விரும்புகிறேன். மாநில உரிமைக்காக தமிழ்நாடு போராடும், சமூகநீதியைக் காக்க தமிழ்நாடு என்றும் போராடும், மத வெறி, சாதி வெறியை எதிர்த்து தமிழ்நாடு நிச்சயம் போராடும். இந்தி திணிப்பை எதிர்த்து தமிழ்நாடு தொடர்ந்து போராடும். ஒரே வரியில் சொல்ல வேண்டும் என்றால் ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசை எதிர்த்து தமிழ்நாடு என்றைக்கும் போராடும்.

ஆளுநர் தமிழ் கற்றுக்கொள்ள முயற்சிக்கிறேன் என்று பேசுகிறார். நீங்கள் தமிழ் கற்றுக்கொள்ள வேண்டும் என்று முயற்சி செய்கிறீர்களே, அதற்கு தமிழ்நாடு போராடியதுதான் முக்கியமான காரணம். அன்றைக்கு தமிழ்நாடு போராடாமல் இருந்திருந்தால், ஆளுநர் ரவி அவர்கள் இன்றைக்கு தமிழில் பேசியிருக்க மாட்டார். நாமெல்லாம் இந்தியில் பேசிக்கொண்டு இருந்திருப்போம். இந்தித் திணிப்புக்கு எதிரான உணர்ச்சியை இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் முதன்முறையாக உருவாக்கியவர்தான் தந்தை பெரியார் அவர்கள். 1937-ல் தந்தை பெரியார்தான் இந்தி திணிப்புக்கு எதிரான முதல் போராட்டத்தை தமிழ்நாட்டில் தொடங்கி வைத்தார். அப்போது தொடங்கி இப்போதுவரைக்கும் எப்படியாவது தமிழ்நாட்டில் இந்தியைத் திணிக்க முயற்சி செய்கிறது ஒரு கும்பல்.

சமீபத்தில், புதியக் கல்விக் கொள்கையை ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்குள் திணிக்கப் பார்த்தது. நம் முதலமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால், இந்தியையும், சமஸ்கிருத்ததையும் குறுக்கு வழியில் தமிழ்நாட்டுக்குள் நுழைக்கப் பார்ப்பீர்கள் என்று நம் முதலமைச்சர் அவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

நீங்கள் புதிய கல்விக்கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழநாட்டு பள்ளிக் கல்வித்துறைக்கு வரவேண்டிய 2,500 கோடி ரூபாயைத் தரமாட்டேன் என்று ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள் நேரடியாகச் சொன்னார். ஆனால், நம் முதலமைச்சர் அவர்கள் நீ 2,500 கோடி இல்லை, 10,000 ஆயிரம் கோடி கொடுத்தாலும் தமிழ்நாட்டுக்குள் என்றைக்கும், இந்தியையும், சமஸ்கிருதத்தையும் திணிக்கவிட மாட்டேன். குலக்கல்வித் திட்டத்தை தமிழ்நாட்டுக்குள் அனுமதிக்க மாட்டேன் என்று நம் தலைவர் அவர்கள் சட்டப் போராட்டத்தை நடத்தினார். அந்த சட்டப் போராட்டத்திலும் வெற்றிப் பெற்றவர்தான் நம் தலைவர் அவர்கள்.

### பெரியாரின் கருத்துகள்

இன்றைக்கு நம் தலைவர் அவர்கள் வெற்றிப் பெற்றுள்ளார் என்றால் அது நம் தலைவரின் வெற்றி மட்டுமல்ல. அது தந்தை பெரியாரின் வெற்றி. இன்றும் தொடர்ந்து பெரியார் அவர்கள்தான் வெற்றியடைந்து கொண்டிருக்கிறார். அதனால்தான் இது தமிழ்நாட்டின் அரசியல். தந்தை பெரியாரின் கருத்துகளில் உண்மையும், நியாயமும் முழுக்க, முழுக்க இருந்தன. அதனால்தான் தமிழ்நாட்டு மக்கள் இன்றைக்கும் பெரியாரை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். வயதானவர்கள் மட்டுமல்ல, இன்றைக்கு இளைஞர்களும் பெரியாரின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் நிலைமை வந்துள்ளது.

எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி சார்பாக, திராவிட இயக்க கருத்துகளை, தந்தை பெரியாரின் கொள்கைகளை, பயிற்சிப் பாசறை வகுப்புகள் வாயிலாக எங்கள் இளைஞர் அணி தம்பிமார்களிடம் எடுத்துச் சென்றுள்ளோம்.

முரசொலியில் பாசறைப் பக்கம், முத்தமிழறிஞர் பதிப்பகம் மூலம், திராவிட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம், பெரியாரியம் சார்ந்த கருத்துகள், வரலாற்றை எடுத்து, இன்றைக்கு இருக்கின்ற இளைஞர்களிடம் அவற்றை எடுத்துச் சென்று சேர்த்துக் கொண்டு இருக்கிறோம்.

எல்லோருக்கும் எல்லா காலத்துக்கும் அது பொருத்தமாக இருப்பதால்தான் இன்றைக்கும் தந்தை பெரியாரின் கருத்துகள் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் வரை சென்றடைந்துள்ளன. நம் தலைவர் முதலமைச்சர் அவர்கள், சமீபத்தில் ஆக்ஸ்போர்டு பல்கலைகழகத்தில் தந்தை பெரியாரின் படத்தைத் திறந்து வைத்துள்ளார். ஏனென்றால், தந்தை பெரியாரின் சிந்தனைகள் எல்லாம் மனிதநேய, மனித உரிமைகளுக்கான சிந்தனைகள்.

இன்றைக்கு இந்தியா முழுவதும் பா.ஜ.க.வுக்கு எதிராகப் போராடுகின்ற மக்கள் அனைவரும் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர் படங்களை கையில் ஏந்தி முழக்கமிடுவதை, நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். தந்தை பெரியார் அவர்கள் அரசியல் ரீதியாக தமிழ்நாட்டைப் பக்குவப் படுத்தி வைத்துள்ளார். அதனால்தான் பா.ஜ.க.வின் எந்த தில்லு முல்லு வேலையும் இன்றைக்கு தமிழ்நாட்டு மக்களிடம் எடுபடவில்லை.

### தமிழ்நாடு சுயமரியாதை மண்

பா.ஜ.க.வால் நேரடியாக மக்கள் ஆதரவைப் பெற முடியாது. அதனால்தான் இன்றைக்கு அ.தி.மு.க.வை மிரட்டி அவர்களின் தோள் மீது ஏறிக்கொண்டு தமிழ்நாட்டுக்குள் நுழைய பார்க்கிறார்கள். பா.ஜ.க-வுக்கு பழைய அடிமைகள் போதாது என்று இன்றைக்கு புதிய அடிமைகளையும் வலை வீசி தேடிக் கொண்டிருக்கிறது. எத்தனை அடிமைகளின் துணையோடு பா.ஜ.க. வந்தாலும், தமிழ்நாடு சுயமரியாதை மண் என்பதை 2026 சட்டமன்றத் தேர்தல் மீண்டும் முடிவு செய்து, அவர்களுக்கு அதை நிரூபித்து காட்டும்.

எடப்பாடி பழனிசாமி அவர்கள் அ.தி.மு.க.வை வாடகைக்கு எடுத்து, அந்தக் கட்சியை இப்போது உள் வாடகைக்குக் கொடுத்திருக்கிறார். நாம் இன்றைக்கு சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். ஆனால், எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கு சுயமரியாதை என்றால் என்னவென்றே தெரியாது.

கார் மாறி சென்றால்கூட பரவாயில்லை, தான் விழுகிற காலையும் மாற்றுபவர்தான் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள். தந்தை பெரியார் அவர்கள் ஊட்டிய சுயமரியாதை உணர்ச்சி, நம் மக்களுக்கு இருக்கின்ற வரை தமிழ்நாட்டை என்றைக்கும் அவர்களால் தொட்டுக்கூட பார்க்க முடியாது.

தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து கழக நிர்வாகிகள், இளைஞர்களை நான் சந்திக்கிறேன். அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்கிறேன். அப்போது அவர்கள் ஆர்வமுடன் என்னுடன் செல்பி எடுப்பதற்கு வருவார்கள். நான் அவர்களிடம் நமக்கு செல்ஃபி முக்கியம் கிடையாது, நமக்கு செல்ஃப் ரெஸ்பெக்ட்தான் முக்கியம் என்று சொல்வேன். அதுதான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் நமக்குக் கற்றுக் கொடுத்தப் பாடம்.

அய்யா ஆனைமுத்து எழுதிய கட்டுரை ஒன்றில், பெரியார் வென்றாரா? என்ற கேள்வியை அவரே கேட்டுவிட்டு, அதற்கு அவரே பதிலளித்துள்ளார். பெரியார் தோற்றார் என்று சொன்னோம் என்றால், அது ஒட்டுமொத்த தமிழர்களின் தோல்வி என்று அர்த்தம் என்று ஆனைமுத்து அவர்கள் ஒரு கட்டுரையில் எழுதியுள்ளார். எனவே, தந்தை பெரியார் அவர்கள் எப்பொழுதும் வெல்வார். பெரியாருக்குத் தோல்வியே கிடையாது. தமிழ்நாடு அதே போல் எப்போதும் வெல்லும், தமிழர்கள் எப்போதும் வெல்வார்கள் அதை யாராலும் தடுக்க முடியாது.

### இந்தியாவுக்கு வழிகாட்டி

அப்படிப்பட்ட தந்தை பெரியார் அவர்களின் கொள்கைப் பாதையில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் காட்டிய வழியில்தான் நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் நம்மை எல்லாம் வழி நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஈரோட்டுப் பாதையில் நடைபோடுவதால்தான் இன்றைக்கு திட்டங்களிலும், கொள்கைகளிலும் ஒட்டுமொத்த இந்தியாவுக்குமே முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டியாக இருந்து வருகிறார்.

தனித்தனியாக செயல்பட்டாலும் பெரியாரின் இயக்கத் தோழர்கள் பல நாட்களுக்குப் பிறகு இன்றைக்கு ஒரே மேடையில் ஒற்றுமையாக உட்கார்ந்து இருக்கிறீர்கள். அதைப் பார்க்கும் பொழுது மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. இதே ஒற்றுமையுடன் அய்யா ஆனைமுத்து அவர்களின் வழியில், தந்தை பெரியாரின் கருத்துகளை நாம் இன்னும் அதிகம் பரப்ப வேண்டும். இது போன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி நடத்த வேண்டும். அப்படி நிகழ்ச்சி நடத்தினீர்கள் என்றால் நிச்சயம், எப்போதெல்லாம் என்னிடம் தேதி கேட்கிறீர்களா அப்போதெல்லாம் நான் எந்தத் தயக்கமும் இல்லாமல், உங்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வேன். எப்போதும் இல்லாத அளவுக்கு, இது மாதிரியான நிகழ்ச்சிகள் நமக்கு இப்போது தேவைப்படுகிறது.

### கொள்கையற்ற கூட்டம்

கொள்கையற்ற இளைஞர் கூட்டம் இப்போது உருவாகி இருக்கிறார்கள். அவர்களை கொள்கைமயப்படுத்த வேண்டிய பொறுப்பு எல்லோரையும் விட நமக்கு அதிகமாக இருக்கிறது. ஆகவே, நாம் அனைவரும் சேர்ந்து அய்யா ஆனைமுத்து காட்டிய வழியில் பெரியாரியத்தை இன்னும் அதிகமாக பரப்புவோம். அதற்கு நானும், இளைஞர் அணியும், நம் தலைவர் அவர்களும் நிச்சயம் உங்களுடன் துணை நிற்போம் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அய்யா ஆனைமுத்து அவர்களின் பெரியாரிய தொகுதி ஒன்று மற்றும் இரண்டு ஆகிய நூல்களை கல்லூரிப் பாடத்தில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையையும், ஆனைமுத்து அவர்கள் பிறந்த பெரம்பலூர் அல்லது திருச்சி மாவட்டத்தில் அவர் பெயரில் அரங்கம் ஒன்று அமைக்க வேண்டும் என்ற இரண்டு கோரிக்கைகளை, அண்ணன் வாலாசா வல்லவன் அவர்கள் இங்கு குறிப்பிட்டுள்ளார். நிச்சயம் இதை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற, நிச்சயம் நான் துணை நிற்பேன் என்று கூறிக் கொள்கிறேன்.

தமிழ் மண்ணில் எந்தக் காலத்திலும் பாசிஸ்டுகளை அனுமதிக்காமல் இருப்பதுதான் அய்யா ஆனைமுத்து அவர்களுக்கு நாம் செலுத்துகின்ற உண்மையான அஞ்சலியாக இருக்க முடியும். ஆகவே, 2026 சட்டமன்றத் தேர்தலில் சங்கிகளையும், அவர்களின் அடிமைக் கூட்டத்தையும் மீண்டும் விரட்டியடிக்க, இந்த மேடையில் நாம் அத்தனை பேரும் உறுதி ஏற்றுக் கொள்வோம்.

அய்யா ஆனைமுத்து அவர்கள் உடலால் மறைந்தாலும், உணர்வுகளால் எழுத்தாகவும், கொள்கையாகவும் என்றும் அவர் நம்மோடு வாழ்ந்து கொண்டுதான் இருப்பார். எனவே அவர் புகழ் ஓங்கட்டும். இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள அண்ணன் வாலாசா வல்லவன் உட்பட அனைவருக்கும் மீண்டும் எனது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து, வாய்ப்பளித்த உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

கழக துணைப் பொதுச்செயலாளரும் மக்களவை உறுப்பினருமான ஆ.ராசா, அமைச்சர் சா.சி.சிவசங்கர், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, மருத்துவர் எழிலன், உயர் நிலைக்குழு உறுப்பினர் பேராசிரியர் மு.நாகநாதன், திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை ராஜேந்திரன், கழக கல்வியாளர்கள் அணித் தலைவர் புலவர் செந்தலைகௌதமன், தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கோ.ராமகிருஷ்ணன், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி துணைப் பொதுச்செயலாளர் வாலாசா வல்லவன், ஃப்ரண்ட்லைன் இதழின் முன்னாள் ஆசிரியர் விஜயசங்கர், குப்பன், முகிலன், காஞ்சி நடராஜன், துரை சித்தார்த், அறிஞர் ஆனைமுத்து அவர்களின் மகள் தமிழ்ச்செல்வி, மருமகன் சீனு அரிமா பாண்டியன், மகன் ஆனை பன்னீர்செல்வம், கழக இலக்கிய அணிச் செயலாளர் கலைராஜன், கழக செய்தித் தொடர்பு குழுவின் இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, பகுதி கழகச் செயலாளர்கள் நந்தனம் மதி, முரளி, மோகன், கன்னிகை ஸ்டாலின், ராஜா அன்பழகன், கழகத்தின் இளம் பேச்சாளர் தமிழ்வாணன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.